**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,
ஐயா,

தேதி: 16.09.2026

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் மற்றும் இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகம், புது தில்லி இணைந்து பட்டியலின (SC) மாணவர்களுக்கான வருமானம் ஈட்டும் காளான் வளர்ப்பு பயிற்சி

புது தில்லியில் உள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகத்தின் 'அனைத்திந்திய ஒருங்கிணைந்த காளான் மேம்பாட்டுத் திட்டத்தின்' (All India Coordinated Mushroom Improvement Project) நிதியுதவியுடன், கோயம்புத்தூர் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் தாவர நோயியல் துறை சார்பில், கோயம்புத்தூர் கோவை கலைமகள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியைச் சேர்ந்த 50 பட்டியலின மாணவர்களுக்கு "காளான் வளர்ப்பின் மூலம் கூடுதல் வருமானம் ஈட்டுதல்" குறித்த ஒரு நாள் பயிற்சித் 16.09.2026 அன்று நடத்தப்பட்டது. இத்திட்டம் பேராசிரியர் மற்றும் துறைத் தலைவர் முனைவர் க. அங்கப்பன் அவர்களின் வரவேற்புரையுடன் தொடங்கியது. அவர், செங்குத்து இடவசதியைப் பயன்படுத்துவதன் மூலம் குறைந்த பரப்பளவில் அதிக வருமானம் தரக்கூடிய ஒரு நவீன தோட்டக்கலைத் தொழிலாக காளான் வளர்ப்பு விளங்குவதையும், இது மாணவர் சமூகத்தின் சமூக–பொருளாதார வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் என்பதையும் வலியுறுத்திக் கூறினார். பயிர் பாதுகாப்பு மையத்தின் இயக்குனர் முனைவர். மூ.சாந்தி தனது சிறப்புரையில், காளான் உற்பத்தியின் முக்கியத்துவம், அதன் ஊட்டச்சத்து மதிப்புகள் மற்றும் கூடுதல் வருமானம் ஈட்டுவதற்கான மதிப்புக்கூட்டல் நன்மைகள் குறித்து எடுத்துரைத்தார். மேலும், இளைஞர்களிடையே சுயவேலைவாய்ப்பு

வாய்ப்புகளை உருவாக்கும் வகையில், வளர்ந்து வரும் தொழில்முனைவோருக்குத் தேவையான தொழில்நுட்ப ஆதரவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் (TNAU) வழங்கும் என்றும் அவர் குறிப்பிட்டார். இத்திட்டத்தின் பேராசிரியரும் திட்ட அதிகாரியுமான முனைவர் கு. திரிபுவனமாலா, 'கற்றல் காலத்திலேயே வருமானம் ஈட்டுதல்' என்ற நோக்கத்தின் அடிப்படையில் அதிக இளம் காளான் தொழில்முனைவோரை உருவாக்குவதன் அவசியத்தை விளக்கினார். அத்துடன், சிப்பி காளான் வளர்ப்பு குறித்த செயல்முறை விளக்கங்களையும் பயிற்சியையும் பயனாளிகளுக்கு வழங்கினார். உதவிப் பேராசிரியர் முனைவர் ப. மகாலட்சுமி, பூச்சி மற்றும் நோய் மேலாண்மை, இயற்கைச் சூழல் உத்திகள் குறித்த தகவல்களை வழங்கினார். காளான் உற்பத்திக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்கள் பயனாளிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டன.

*மக்கள் தொடர்பு அலுவலர்*